Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.232/ 18
**Deposition of P.W.13**

| | | |
|---|---|---|
| Name | : | அன்பழகன் |
| Father's Name | : | ஆவுடை |
| Village | : | அனவயல் |
| Taluk | : | ஆலங்குடி |
| Caste | : | |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 52 **/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 12.10.21**

**முதல் விசாரணை**

நான் தற்போது அனவயல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜர் அ.சா.ஆ **2** ல் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். இந்த கையொப்பத்தை **23.7.2018** ம் தேதி காலை **6.30-7** மணியளவில் பூச்சிக்கடை முக்கம் அருகே தேங்காய் வியாபாரி ராஜா வீட்டின் முன்பாக விபத்து நடந்தது சம்மந்தமாக வடகாடு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தனர். அதில் நானும் சிவா என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னை போலீசார் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் போலீசார் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. இறந்துபோன பிரகாஷ் என் பங்காளி ஆவார். விபத்து நடந்த இடத்தில் ராஜா வீட்டை ஒட்டியவாறு கடை வீதி உள்ளது என்று சொன்னால் சற்று தள்ளிதான் உள்ளது. இறந்துபோனவர் என் உறவினர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.232/ 18
**Deposition of P.W.12**

| | | |
|---|---|---|
| Name | : | சிவா |
| Father's Name | : | சக்திவேல் |
| Village | : | அனவயல் |
| Taluk | : | ஆலங்குடி |
| Caste | : | |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 42 **/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 12.10.21**

**முதல் விசாரணை**

நான் தற்போது அனவயல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். இந்த கையொப்பத்தை **23.7.2018**ம் தேதி காலை **6.45** மணியளவில் பூச்சிக்கடை முக்கம் அருகே தேங்காய் வியாபாரி ராஜா வீட்டின் முன்பாக விபத்து நடந்தது சம்மந்தமாக வடகாடு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தனர். அதில் நானும் அன்பழகன் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சாஆ.**2** ஆகும். என்னை போலீசார் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எனக்கு எழுத படிக்க தெரியும். நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் அரை கி.மீ இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ராஜா வீட்டிற்கு மேற்கே ஹோட்டல் கடைகள் கொண்ட கடை வீதிகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். ராஜா வீட்டிற்கு அருகே யார் யாருக்கு சொத்து உள்ளது என்ற விபரம் ஓரளவிற்கு தெரியும். சம்பவ இடத்தில் விசாரித்ததுதான். என்னை காவல்நிலையத்திற்கு என்னை போலீசார் அழைக்கவில்லை. இறந்துபோன பிரகாஷ் எனது அண்ணன் மகன் ஆவார். நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.232/ 18
**Deposition of P.W.11**

| | | |
|---|---|---|
| Name | : | சின்னத்தம்பி |
| Father's Name | : | திருப்பதி |
| Village | : | அனவயல் |
| Taluk | : | ஆலங்குடி |
| Caste | : | |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 43 **/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 12.10.21**

**முதல் விசாரணை**

நான் தற்போது அனவயல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பிரகாஷ் என்பவரை எனக்கு தெரியும். அவர் என் பக்கத்து வீட்டுக்காரர். கடந்த **23.7.2018** ம் தேதி மதியம் **3** மணியளவில் நான் அனவயல் கிராமத்தில் இருந்தேன். அப்பொழுது பிரகாஷ் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். பைக்கும் டாடா இண்டிகா காரும் மோதியதில் கீரோ ஸ்பிளண்டர் பிளஸ் வாகனத்தில் மேற்கே இருந்த கிழக்கே மாங்காடு பூச்சிக்கடை அருகே தேங்காய் வியாபாரி வீட்டிற்கு அருகில் சென்ற பிரகாஷ் மற்றும் பாலமுருகன் சென்ற இருசக்கர வாகனத்தில் எதிரே வந்த டாடா இண்டிகா கார் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து மோதி அதில் பிரகாஷ் என்பவருக்கு காதில் இரத்தமும் தோள்பட்டையில் காயமும் ஏற்பட்டிருந்தது. பாலமுருகன் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டும் கால் முறிந்தும் கிடந்தனர். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். இரண்டு நபர்களும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். பட்டுக்கோட்டை தாலுகா கொல்லுக்காடு கிராமத்தை சேர்ந்த அற்புதராஜ் என்பவர் விபத்து ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டேன். விபத்தை ஏற்படுத்தய வாகனத்தின் ஓட்டுநர் நான் சம்பவ இடம் சென்றபோது அங்கு இல்லை. அவர் ஓடிவிட்டார். பின்னர் இறந்துபோன இருவரையும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு வடகாடு காவல் ஆய்வாளர் இறந்த பிரேதத்தின் மீது விசாரணை செய்தார். அதில் நான் சாட்சியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர். தெரிந்த விபரம் கூறினேன்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இறந்துபோன பிரகாஷ் என்பவர் என் உறவினர் என்று சொன்னால் சரிதான். 23.7.2018 ம்தேதி மாலை 3 மணிக்குதான் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்றேன் என்று சொன்னால் சரிதான். சம்பவம் மதியம் 2.30 லிருந்து 2.45 மணிக்குள் நடந்திருக்கும். விபத்துக்குள்ளான வாகனங்களின் எண் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் வைத்து விசாரித்தபிறகு விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. மருத்துவமனையில் விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் எனது போலீஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேன்.